மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை
அ.வ.எண். 104/25

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: பேச்சியம்மாள் தேதி : 13.02.26
வயது : க/பெ : வேம்பு
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

**13.02.26 குறுக்கு விசாரணை**

1. யாரெல்லாம் வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் நான் மட்டும் தான் வழக்கு போட்டுள்ளேன். பாபுகுமார், முத்துக்கனி, முத்துபாண்டி ஆகியோர் வழக்கு போட்டுள்ளனரா என்றால் இல்லை. பிறகு ஏன் வாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் அவர்கள் கட்சி சேரவில்லை என்றால் நான் அவர்கள் பிரதிவாதிகளாக தான் சேர்க்கவேண்டும் என்றால் சாட்சிக்கு பதில் தெரியவில்லை.

2.யாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளோம் என்றால் பாபுகுமாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன். வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் நான் படிக்கவில்லை. என் கணவர் வேம்பு இறந்துவிட்டார். அவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு போட்டுள்ளோம். என் கணவர் பிறந்து வளர்ந்த ஊர் கீழ தூதுக்குழி. என் கணவரின் அப்பா பெயர் வேலாயுதம். அவர் இறந்துவிட்டார். என் கணவரின் அம்மா பெயர் பேச்சி. அவரும் இறந்துவிட்டார்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:53:43 +0530

3.வேம்புக்கு 2 மனைவிகள். மூத்த மனைவி பெயர் பாப்பா. 2ம் மனைவி பெயர் பேச்சியம்மாள். வேம்பு மற்றும் பாப்பாவுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 40 வருடத்திற்கு முன்பு நடந்தது. தேதி, மாதம், வருடம் தெரியாது. வேம்புக்கும், பாப்பாவுக்கும் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்று தெரியாது. பாப்பாவின் சொந்த ஊர் செய்துங்கநல்லூர் அருகே சந்தையடியூர் ஆகும். வேம்புவும், பாப்பாவும் திருமணத்திற்கு பிறகு தூதுக்குழியில் வாழ்ந்து வந்தனர்.

4.வேம்புக்கும், பாப்பாவுக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் கிடையாது. பாப்பா எங்கு உள்ளார் என்றால் இறந்துவிட்டார். பாப்பா எப்போது இறந்தார் என்றால் 44 வருடம் இருக்கும். பாப்பா தூதுக்குழியில் வைத்து இறந்துவிட்டார். பாப்பா இறக்கும் போது அவருக்கு எத்தனை வயது என்றால் தெரியாது. எனக்கு சொந்த ஊர் கோவில்பத்து.

5.வேம்புக்கும், எனக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 43 வருடத்திற்கு முன்பு நடந்தது. தேதி, மாதம், வருடம் தெரியாது. திருமணத்தின் போது எனக்கு 32 வயது இருக்கும். எனக்கும், வேம்புக்கும் தூதுக்குழியில் வைத்து திருமணம் நடந்தது. எனக்கும், வேம்புக்கும் 3 குழந்தைகள். அவர்கள் பாபுகுமார், முத்துக்கனி, முத்துபாண்டி ஆவர். பாபுகுமார் வெளியூரில் உள்ளார். பாபுகுமார் எப்போது பிறந்தார் என்றால் அவருக்கு 42 வயது இருக்கும். பாபுகுமார் தான் முதல் மகன்.

6.பாபுகுமார் எப்போது பிறந்தார் என்றால் என் திருமணம் முடிந்து ஒரு வருடம் கழித்து பிறந்தார். முத்துக்கனி கோவில்பத்தில் உள்ளார். முத்துபாண்டி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.13 19:53:47 +0530

என்னுடன் வசித்து வருகிறார். வேம்பு 06.06.2007 ல் தூதுக்குழியில் உள்ள வீட்டில் வைத்து இறந்தார். அப்போது வேம்பிற்கு எத்தனை வயது என்றால் தெரியாது. அவரது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோம். பாப்பா உயிருடன் இருக்கும்போது வேம்பு என்னை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. பாப்பா இறந்த பிறகு தான் என்னை திருமணம் செய்தார்.

7.பாப்பா உயிருடன் இருக்கும் போது தான் வேம்பு என்னை 2 வதாக திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. வேம்புவின் வாரிசு சான்றிதழ் எதற்கு தேவைப்படுகிறது என்றால் வீடு வகைக்கு தேவைப்படுகிறது. நான் காலம் சென்ற வேம்புக்கு வாரிசு ஆக மாட்டேன் என்றால் சரியல்ல. வழக்கில் கேட்ட பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:53:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.